. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

உ

ஓம் சரவணபவ

கவலைகள் போக்கும் கந்தபுராணம்

(பிரார்த்தனை நூல்)

வெளியீடு:

ஸ்ரீகந்தபுராண ஞானஸபை,

கள்ளக்குறிச்சி- 606 202.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

உ

ஒம் சரவண பவ:

ஸ்ரீ நல்லூர் முருகன் துணை

முன்றாம் பதிப்பு: 2022

முகவுரை

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

எல்லாம்வல்ல அறுமுகசிவன் திருவருள் குருவருள் துணையோடு, **கவலைகள் போக்கும் கந்தபுராணம்** என்ற பிரார்த்தனை நூல் ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூஜை வைபவத்தில் வெளியிடப்படுகின்றது.

சைவ சமயத்தின் முப்பெரும் புராணங்களில் சிவபெருமானின் நெற்றிக்கண்ணாக பாவிக்கப்படுவது ஸ்ரீ கந்த புராணமாகும். கந்த புராணத்தில் இல்லாதது எந்த புராணத்திலும் இல்லை என்ற பழமொழி இதன் பெருமையை உணர்த்தும்.

கந்தபுராணம் படித்தால் கைமேல் பலன் – என்பது எமது அனுபவ வாக்கு.

கந்தபுராணம் படித்தால் கவலைகள் நீங்கும் என்பதனை யுத்த காண்டத்தில் வீரவாகு மூலமாக கூறப்பட்டுள்ளது

அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் நின்றும் வந்த இயற்கையால் சத்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேல் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக் கவலை தீர்ந்தோம்.

கந்தபுராணம் முழுமையும் பாராயணம் செய்வோர் வேண்டிய பலன்களை பெறுவது திண்ணம். அவ்வகையில் நம் அன்பர்கள் பாராயணம் செய்வதற்காக கந்த புராணத்தில் உள்ள முக்கிய பலன்தரும் மந்திரப் பாடல்களை தொகுத்து தந்துள்ளோம்.

ஸ்ரீ கந்தபுராணம் பாடியருளிய ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூஜை நாளில் இந்நூல் வெளிவருவது குருவருளையும், திருவருளையும் ஒருங்கே பெற்றிட செய்யும்.

அன்பர்கள் இந்நூலை பாராயணம் செய்து வேண்டிய பலனைப் பெற்று குகனருள் பெறப் ப்ராத்திக்கின்றோம்.

விலை: இந்நூலை நீங்கள் பாராயணம் செய்து பலன் அடைவதே எங்களுக்கான காணிக்கை

குஹனருள்,
ஸ்ரீ கந்தபுராண ஞானஸபை
கள்ளக்குறிச்சி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

உ

ஓம் சரவணபவ:

கவலைகள் போக்கும் கந்தபுராணம்

(பிரார்த்தனை நூல்)

ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூஜை விழா மலர்

(மாசி – மிருகசீரிஷம்)

தொகுப்பு :

சிவஸ்ரீ.தில்லை எஸ்.கார்த்திகேயசிவம் M.A.,

வெளியீடு :

ஸ்ரீகந்தபுராண ஞானஸ்பை

கள்ளக்குறிச்சி.

செல். 9751848933

(ஸ்ரீ பிலவ வருஷம் மாசி-மிருகசீரிஷம்)

2022

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

ஓம் முருகா

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா
ஞானவேல் முருகனுக்கு அரோகரா
சக்திவேல் முருகனுக்கு அரோகரா
ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் குருவடி சரணம்

விநாயகர் காப்பு

1) திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

சுப்ரமணியர் காப்பு

2) மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

வாழ்த்து

3) வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நல்தவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

குழந்தைகள் கல்வியில் முன்னேற

4) நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேர் அகத்து அலமரும் பிறவி தீர்த்திடும்
தாரகத்து உருவமாம் தலைமை எய்திய
ஏரகத்து அறுமுகன் அடிகள் ஏத்துவாம்.

5) தாஅறும் உலகெலாம் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொறு இருந்திடும் நலம்கொள் வாணிதன்
பூ அடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, K

புத்திரபாக்கியம் பெற்றிட

6) ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பமும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமலஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.

7) அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறுங் கரங்கள்பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

பதவி கிடைத்திட

8) தெய்வத யானை என்னும் சீர்கெழு மடந்தை தன்னை
அவ்விடை வதுவை ஆற்றி அங்ஙனம் சிலநாள் வைகி
மெய்வியன் உலகில் சென்று விண்ணவர்க்கு அரசன் ஆக்கி
எவ்வம் இல் மகுடம் சூட்டி இந்திரன் தன்னை வைத்தான்.

பயம் நீங்குதல்

9) பேர ஆகுவை உடையவன் இளவல் பேரருளால்
சூர ஆகுலம் வானவர் பெறாவகை தொலைப்பான்
ஏர வாகுறும் செம்மணிப் பாவை தன் இடத்தில்
வீரவாகு வந்து உதித்தனன் உலகெலாம் வியப்ப.

ஓம் வீரவாகுவே துணை
ஓம் வீரகேசரி துணை
ஓம் வீரமா மகேந்திரன் துணை
ஓம் வீரமா மகேஸ்வரன் துணை
ஓம் வீரமாபுரந்தரன் துணை
ஓம் வீரராக்தன் துணை
ஓம் வீரமார்த்தாண்டன் துணை
ஓம் வீராங்கதன் துணை
ஓம் வீரதிரன் துணை

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

நோய்நொடிகள் நீங்க வேண்டுதல்

10) எந்தை சக்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்துபோல ஒன்றாகியே கூடிய முறைபோல்
அந்தம் இல்லதோர் மூவிருவடிவம் ஒன்றாகிக்
கந்தன் என்று பேர் பெற்றனன் கவுரிதன் குமரன்

11) கந்தன் தனை நீர்போற்றிய கடனால் இவன் உங்கள்
மைந்தன் எனும் பெயராகுக மகிழ்வால் எவரேனும்
நுந்தம் பகலிடை இன்னவன் நோன்றாள் வழிபடுவோர்
தம்தம்குறை முடித்தே பரம்தனை நல்குவம் என்றான்.

ஓம் கந்தனே துணை
ஓம் கடம்பனே துணை
ஓம் காங்கேயன் துணை
ஓம் சரவணபவனே துணை
ஓம் கார்த்திகேயனே துணை
ஓம் குமரனே துணை

அரசு பயம் நீங்கிட

12) கடிகொள் பங்கயன் காப்பினை எம்பிரான்
விடுதல் கூறி விடுத்தனன் ஈங்கு எனைத்
தடைபடாது அவன் தன்சிறை நீக்குதி
குடிலை அன்னவன் கூறற்கு எளியதோ

13) அத்தனது இயல்பு நோக்கி அறுமுகத்து அமலன் ஐய
சித்தம் இங்கு இதுவே ஆகில் திசைமுகத்து ஒருவன் தன்னை
உய்த்திடு சிறையின் நீக்கி ஒல்லையில் தருவன் என்னாப்
பத்தியின் இறைஞ்சிக் கூறப் பராபரன் கருணை செய்தான்.

சத்ரு பயம் நீங்கிட

14) விட்டவேல் மீண்டு கந்தவேள் கரத்து இருப்பத் தீயோன்
பட்டதும் வெற்பு மாய்ந்த பான்மையும் அவுணர் யாரும்
கெட்டது நோக்கி மாலும் கேழ்கிளர் கமலத் தேவும்
முட்டிலா மகத்தின் வேந்தும் முனிவரும் சுரரும் ஆர்த்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

பூமி, மனை அமைந்திட

15) மகர தோரணம் வாரியின் மல்கிய
சிகர மாளிகை செம்பொனின் சூளிகை
நிகரில் பற்பல ஞெள்ளல்கள் ஈண்டிய
நகரம் ஒன்றினை ஆயிடை நல்கினான்.

16) அவ் வரைக்கண் அகன்பெரு நொச்சியுள்
கைவல் வித்தகக் கம்மியர் மேலவன்
எவ் எவர்க்கும் இறைவன் இருந்திடத்
தெய்வத்துக்கு தலம் ஒன்று செய்தானரோ.

மரண பயம் நீங்கிட

17) ஈர்க்கும் பாசம் சுந்தர முற்றும் இடரில்லா
மார்க்கண்டன் முன் தோன்றினன் நின்பால் வருதுன்பம்
தீர்க்கின்றாம் நீ அஞ்சலை என்றே திரையாழிக்
கார்க்கண்டத்துக் கண்ணுதல் ஐயன் கழறுற்றான்.

18) மைந்த நீ நமை வழுத்தி மாசிலா
முந்து பூசனை முயன்ற தன்மையால்
அந்தம் இல்லதோர் ஆயுள் நிற்குயாம்
தந்து நல்கினோம் என்று சாற்றினான்.

பெண்கள் மனதிடம் பெற

19) செய்ய சடைமேல் சிறந்த மதிக் கோடு புனை
துய்யவனும் வேலைத் துயின்றோனும் சேர்ந்தளித்த
ஐயன் எமக்கு ஓர் அரணாகியே இருக்க
நையல் முறையாமோ நங்காய் நவிலுதியால்.

காவல் தெய்வம் துணை நிற்க

20) அங்கன் மேவி அரிகர புத்திரன்
சங்கையில் பெரும் சாரதர் தம்மொடும்
எங்கும் ஆகி இருந்து எவ் உலகையும்
கங்குலும் பகல் எல்லையும் காப்பனால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

முருகன் விஸ்வரூப தரிசன பலன் (மனக்குழப்பம் நீங்கிட)

21) முன்னவர்க்கு முன் ஆகுவோர் தமக்கு முற்பட்டுத்
தன்னை நேர் இலாத ஈசனாம் தனிப் பெயர் தாங்கி
இன் உயிர்க்கு உயிராய் அரு உருவமாய் எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும் பரமனே அவன் காண்.

22) முக்கன் மூர்த்தியும் ஆங்கவன் முண்டகா சனனும்
சக்கரப்படை அண்ணலும் ஆங்கவன் தானே
திக்குப் பாலருங் கதிர்களும் முனிவருஞ் சிறப்பின்
மிக்க தேவரும் ஆங்கவன் யாவர்க்கும் மேலோன்.

23) மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேல்படை வீரன் வந்தான்
ஏவரும் தெரிதல் தேற்றா இருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்ன மெல்லாம்

அச்சம் நீங்கிட

24) நண்ணினர்க்கு இனியாய் ஒலம் ஞான நாயகனே ஒலம்
பண்ணவர்க்கு இறையே ஒலம் பரஞ்சுடர் முதலே ஒலம்
எண்ணுதற்கு அரியாய் ஒலம் யாவையும் படைத்தாய் ஒலம்
கண்ணுதல் பெருமான் நல்கும் கடவுளே ஒலம் ஒலம்.

25) தேவர்கள் தேவே ஒலம் சிறந்த சிற்பரனே ஒலம்
மேவலர்க்கு இடியே ஒலம் வேற்படை விமலா ஒலம்
பாவலர்க்கு எளியாய் ஒலம் பன்னிரு புயத்தாய் ஒலம்
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஒலம் ஒலம்.

எதிரிகள் நீங்கிட

26) விடம்பிடித்து அமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்ந்துமுன் இயற்றி அன்ன
உடம்பிடித்து தெய்வம் இவ்வாறு ஒருகெழு செல்வின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்தது அன்றே.

27) செங்கதிர் அயில்வான் கொண்டு செருமுயன்று அருமின் ஆர்த்துத்
துங்கமொடு எதிர்ந்து சீறும் சூரரும் கிழித்துப் பின்னும்
அங்கமது இருகூறாக்கி அலைகடல் வரைப்பில் வீட்டி
எங்கணும் மறைகள் ஆர்ப்ப எஃகம்வான் போயிற்றம்மா.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Ko

மனம் திருந்தினால் முருகன் அருள் உண்டு (மன்னிப்பு கோரல்)

28) தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்று உய்ந்தான்

திருமண பாக்கியம் பெற்றிட

29) மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றனனால் கழல் சேர்ந்தார்க்
அருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்.

30) செங்கமலத்து இறை சிந்தையின் ஆற்றி
அங்கையின் ஈந்திட ஆண்டகை கொண்ட
மங்கள நாணை மணிக்களம் ஆர்த்து
நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான்.

சிவப்பரம் வாருளை சரணடைதல்

31) அவனருள் பெறாது முத்தி அடைந்தனர் இல்லை அல்லால்
அவனருள் இன்றி வாழும் அமரரும் யாரும் இல்லை
அவனருள் எய்தின் எய்தா அரும் பொருள் இல்லை ஆணை
அவன் அலது இறைவன் இல்லை அவனை நீ அடைதி என்றான்.

தொழில் லாபம் ஏற்பட

32) ஆவதோர் காலை எந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க என்றான்.

33) வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறு இரண்டுகை அறுமுகம் கொண்டுவேள் அடைந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

கர்வம் நீங்கிட

34) மலர் அயன் முதலே ஆக வரம்பிலா உயிரை முன்னம்
தலை அளித்து உதவுகின்ற தாதையாய் அளித்து மாற்றி
உலகெலாம் ஆகி ஒன்றாய் உயிர்க்கு உயிராகி மேலாய்
இலகிய பரனை நீத்தோ யாகம் ஒன்று இயற்ற நின்றாய்.

35) புங்கவர் எவர்க்கும் நல்கும் புவி புகழ் அவிகொள்வானும்
அங்கியின் முதலும் வேள்விக்கு அதிபனும்அளிக்கின்றானும்
சங்கரன் தானே வேதம் சாற்றும் ஆல் மகத்துக் ஆதி
இங்கொரு தேவு உண்டு என்னின் எழுக என உரைத்திமாதோ.

சிவபரத்துவம் உணருதல்

36) மால் அயன் முதலோர் யாரும் வரம்பு இலித் திருவை எய்த
மேலைநாள் அளித்தோன் தானும் விமலனும் இனையர்க்கு எல்லாம்
மூலமும் தனக்கு வேறு ஓர் முதல் இலாதவனும் எங்கள்
ஆலமர் கடவுள் அன்றி அமரரில் யாவர் அம்மா.

37) தேவ தேவன் மாதேவன் சிறப்பு உடை ஈசன் எம்கோன்
மூவரின் முதல்வன் ஏகன் முடிவிற்கு முடிவாய் நின்றோன்
ஆவியுள் ஆவி ஆனோன் அந்தணன் ஆதி என்றே
ஏவரை இசைத்த அம்மா எல்லையில் மறைகளெல்லாம்.

கிருத்திகை விரத விதிமுறை

38) முன்னவன் அதனைக் கேளா முழுது அருள் புரிந்து நோக்கி
அன்னது பெறுதி திண்ணம் ஆறுமாமுகத்து நம்பி
பொன்னடி வழிபாடு ஆற்றிப் பொருவில் கார்த்திகை நாள்
நோன்பைப்
பன்னிரு வருடம் காறும் பரிவுடன் புரிதி என்றான்.

39) நாரதன் வினவி ஈது நான் புரிந்திடுவன் என்னாப்
பாருலகு அதனில் வந்து பரணிநாள் அபராணத்தில்
ஓர் பொழுது உணவு கொண்டே ஒப்பில் கார்த்திகை நாள் தன்னில்
வீரவேல் தடக்கை அண்ணல் விரதத்தை இயற்றல் உற்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, K

தொடர்ச்சி.....

40) அந்தநாள் செல்லப் பின்னர் உரோகிணி அடைந்த காலைச்
சந்தியா நியமம் எல்லாஞ் சடக்கென முடித்துக் கொண்டு
கந்தவேள் செம்பொன் தண்டைக்கான் முறை வழிபட்டேத்தி
வந்த மாதவர்களோடும் பாரணம் மகிழ்ந்து செய்தான்.

41) விழியொடும் இமை கூடாமே வெய்யவன் குடபால் வீழும்
பொழுதளவு இருந்து மற்றைப் புறத்துள செயலும் போற்றி
அழிவறு விரதம் இவ்வாறு ஆறிரு வருடம் ஆற்றி
எழுவகை முனிவோருக்கும் ஏற்றமாம் பதத்தைப் பெற்றான்.

கிருத்திகை விரத பலன்

42) இந்த நல்விரதம் தன்னை ஈண்டு ஒரு மறையோன் நோற்று
முந்திய மனுவே ஆகி முழுது உலகு அதனை ஆண்டான்
அந்தணன் ஒருவன் பின்னும் அவ்விரதத்தைப் போற்றிச்
சிந்தையின் நினைந்து ஆங்கு எய்தித் திரிசங்குவாகி உற்றான்.

43) ஈங்கு ஒரு மன்னன் வேடன் இருவரும் நோற்று வண்மை
தாங்கிய அந்தி மானே சத்திமான் என்று பேராய்
வீங்குநீர் உடுத்த பாரை மேலை நாள் புரந்தார் என்ப
ஆங்கு அவர் பின்னாள் முத்தி அடைவது திண்ணம் அம்மா.

44) கந்தன்தனை நீர்போற்றிய கடனால்இவன் உங்கள்
மைந்தன்எனும் பெயராகுக மகிழ்வால் எவரேனும்
நுந்தம் பகலிடை இன்னவன் நோன்றாள் வழிபடுவோர்
தம்தம் குறை முடித்தே பரம்தனை நல்குவம் என்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kol

ஸ்கந்த சஷ்டி விரத முறை

45) வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டியே தனிவேல் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்
சொல்படு துலையின் திங்கள் சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதி ஆக மூவிரு வைகல் நோற்றார்.

46) முந்திய வைகல் ஆதி மூவிரு நாளும் காலை
அந்தம் இல் புனலின் மூழ்கி ஆடை ஓர் இரண்டு தாங்கிக்
சந்தியில் கடன்கள் செய்து தம்ப பிம்ப கும்பத்தில்
கந்தனை முறையே பூசை புரிந்தனர் கங்குற் போதில்.

47) நிறை தரு கட்டி கூட்டி நெய்யினால் சமைக்கப்பட்ட
குறை தவிர் மோதகத்தைக் குமரநாயகற்கு அருத்திப்
பிறவுள விதியும் செய்து பிரான் திருப்புகழ் வினாவி
உறுபுனல் சிறிது மாந்தி உப வசித்து இருந்தார் மாதோ.

ஸ்கந்த சஷ்டி விரத பலன்

48) ஆரண முனிவர் வானோர் அங்கு அதன் மற்றை வைகல்
சீர் அணி முருகவேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்
பாரணம் விதியில் செய்தார் பயிற்றும் இவ் விரதம் தன்னால்
தாரணி அவுணர் கொண்ட தம்பதம் தலைமை பெற்றார்.

வெற்றி புகழ் அடைந்திட (வேல் ப்ரார்த்தனை)

49) அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் நின்றும் வந்த இயற்கையால் சத்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேல் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக் கவலை தீர்த்தேம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, K

செல்வ வளம் பெற

50) மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக் கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அருமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலம் போதில் வீற்றிருந்து அருளினானே

மனம் அமைதி கொள்ள

51) இந்த வெற்பினைத் தொழுதுளார் பவமெலாம் ஏகும்
சிந்தை அன்புடன் இவ்வரையின் கணே சென்று
முந்த நின்ற இச்சுனை தனில் விதிமுறை மூழ்கி
வந்து நந்தமைத் தொழுதுளார் நம்பதம் வாழ்வார்

52) அஞ்சு வைகல் இவ் அகன் கிரி நண்ணி எம்மடிகள்
தஞ்சமென்று உள்ளத்து உன்னியே வழிபடும் தவத்தோர்
நெஞ்ச கந்தனில் வெஃகிய போகங்கள் நிரப்பி
எஞ்ச லில்லதோர் வீடுபேறை டந்தினி திருப்பார்.

53) தேவராயினும் முனிவர ராயினும் சிறந்தோர்
ஏவராயினும் பிறந்தபின் இவ்வரை தொழாதார்
தாவ ராதிகள் தம்மினும் கடையவரே தமது
பாவ ராசிகள் அகலுமோ பார்வலஞ் செயினும்.

முருகனை சரணாகதி அடைதல்

54) பாதகம் பல செய்தவராயினும் பவங்கள்
ஏதும் வைகலும் புரிபவர் ஆயினும் எம்பால்
ஆதரங்கொடு தணிகை வெற்பு அடைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமியர் எவற்றினும் மிக்கார்.

முருகன் ஆட்கொண்டு அருளல்

55) புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையுறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

உலக நலன் வேண்டுதல்

56) துய்யது ஓர் மறை களாலும் துதித்திடற்கு அரிய செவ்வேள்
செய்ய பேர்அடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேல் படை வாழ்க அன்னான்
பொய் இல் சீர் அடியார் வாழ்க வாழ்க இப் புவனம் எல்லாம்

கந்தபுராண பாராயண பலன்

57) இந்திரர் ஆகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவிச்
சிந்தையின் நினைத்த முற்றிச் சிவகதி அதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்து ஓதுவோரே.

58) வற்றா அருள்சேர் குமரேசன் வண் காதை தன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும் துகளு றாமே
கற்றாரும் கற்பான் முயல்வாரும் கசிந்து கேட்கல்
உற்றாரும் வீடு நெறிப்பாலின்உறுவர் அன்றே.

கச்சியப்ப சிவாச்சாரியார் துதி

59) ஒப்பறு சூர்முத லுடலங் கீறிய
மெய்ப்படு வேற்படை வீரன் மாக்கதை
தப்பறு தமிழினாற் தந்த சீர்க்கச்சி
யப்பசற் குருபதம் அகத்துட் போற்றுவாம்.

வாழ்த்து

60) ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேல்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

61) வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நல்தவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

வெற்றிவேல முருகனுகு அரோகரா
குமரகோட்டம் முருகனுக்கு அரோகரா
செந்தூர் முருகனுக்கு அரோகரா
குஹார்ப்பணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

n Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, K

உ

ஓம் சரவண பவ:

முருகன் குறித்த பழமொழிகள்

1. கந்தபுராணம் படித்தால் கைமேல் பலன் அளிக்கும்.
2. வேலை வணங்குவதே வேலை.
3. சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமில்லை; சுப்ரமணியருக்கு மிஞ்சிய தெய்வமில்லை.
4. வயலூர் இருக்க அயலூர் தேவையா?
5. காசுக்குக் கம்பன் கருணைக்கு அருணகிரி
6. அப்பனை பாடிய வாயால் ஆண்டிச் சுப்பனைப் பாடுவேனா?
7. முருகனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை; மிளகுக்கு மிஞ்சிய மருத்துவம் இல்லை.
8. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் (சஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.)
9. கந்தபுராணத்தில் இல்லாதது எந்த புராணத்திலும் இல்லை.
10. கந்தன் களவுக்குக் கணபதி சாட்சியாம்.
11. பழநி பழநின்னா பஞ்சாமிர்தம் வந்திடுமா?
12. சென்னிமலை சிவன் மலை சேர்ந்ததோர் பழனிமலை
13. செந்தில் நமக்கிருக்கக் சொந்தம் நமக்கெதற்கு?
14. திருத்தணி முருகன் வழித்துணை வருவான்.
15. வேலனுக்கு ஆனை சாட்சி.

    வேலிருக்க வினையுமில்லை.

    மயிலுருக்கப் பயமுமில்லை.
16. செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை
17. கந்தன் பாதம் கனவிலும் காக்கும்.
18. நல்லூர் முருகனே நமக்கு துணை

குகஹார்ப்பணம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Koll

வேலுண்டு வினையில்லை,
மயிலுண்டு பயமில்லை!
குகனுண்டு குறையில்லை மனமே!
கந்தனுண்டு கவலையில்லை மனமே!

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே."

ஸ்ரீ சத்யா ஆப்செட், கள்ளக்குறிச்சி. செல்.89739 37656.
Center for Shaiva Studies, Pondicherry Collection